
பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 29 செவ்வாய்க்கிழமை 15.10.2024 கதிர் 342

## இது ரகசியம் அல்ல!



காட்சி ஊடகம் ஒன்றில் நாடாளுமன்ற வேட்பாளரான சசிகலாவின் நேர்காணல் ஒன்றைப் பார்க்கக் கிடைத்தது. அதில் நெறியாளர் ஒரு கேள்வியை ☞ 2

# திருநெல்வேலி பால்பண்ணைக்கு 'சீல்' சுகாதாரச் சீர்கேடுகளால் நடவடிக்கை

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பால் பண்ணையின் பால் உற்பத்தித் தொழிற்சாலைக்கு நீதிமன்ற உத்தரவில் 'சீல்' வைக்கப்பட்டுள்ளதுடன், 70 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் திருநெல்வேலி பால் தொழிற்சாலை ஓகஸ்ட் 8 சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அங்கு சுகாதார சீர்கேடுகள் அடையாளப்படுத்தப்பட்டன. பொது சுகாதார பரிசோதகர்களால் இனங்காணப்பட்ட சுமார் 30ற்கும் மேற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எழுத்து மூலமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த அறிவித்தல் பால் தொழிற்சாலை தலைவர், முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் சபையினருக்கு உரிய தெளிவுபடுத்தல்களுடன் வழங்கப்பட்டது.

ஆனால் குறைபாடுகள் எவையும் நிவர்த்தி செய்யப்படவில்லை என்று ஒக்டோபர் 12 நடத்தப்பட்ட மீள்பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்த நேற்று பால் தொழிற்சாலைக்கு எதிராக யாழ் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த மேலதிக நீதவான் லெனின்குமார், பொது சுகாதார பரிசோதகர் சஞ்சீவனால் மன்றில் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்தினை கருத்தில் கொண்டு தொழிற்சாலைக்கு 'சீல்' வைத்து மூடுமாறு பணிப்புரை விடுத்தார். அத்துடன் 70 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் விதித்ததுடன், திருத்தவேலைகள் முடிந்தவுடன் பொதுசுகாதார பரிசோதகரினை மன்றுக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பணித்தார்.

## கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியேதும் இல்லை

### நிதி அமைச்சு விளக்கம்

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவுபற்றாக்குறை இருக்கும்போது அதை ஈடுபட்ட உள்நாட்டில் கடன் வாங்குதைத் தவிர வேறு வழியில்லை என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. பணத்தைப் புதிதாக அச்சிட முடியாது என்கிற நிலையும் ☞ 8





## ஈபிடிபி கட்சிக்கு 5 ஆசனங்கள் கிடைத்தால் 2 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு

### டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

2024 தேர்தலில் ஈபிடிபிக்கு 5 ஆசனங்கள் கிடைத்தால் இரண்டு வருடங்களுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார் ஈபிடிபியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

ஈபிடிபியின் முல்லைத்தீவில் ☞ 8

# தமிழ் அரசுக் கட்சியை முடக்கும் நோக்கத்தோடு வழக்குத் தாக்கல்

## தலைவர், செயலாளர், நிர்வாகச் செயலருக்கு தடை விதிக்கக்கோரி யாழ். நீதிமன்றில் மனு

தமிழ் அரசுக் கட்சியின் அனைத்துச் செயற்பாடுகளையும் முடக்கும் வகையில் கட்சியின் தலைவர், செயலாளர், நிர்வாகச் செயலாளர் ஆகியோருக்கு எதிராகத் தடை விதிக்கக்கோரி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்சியின் நிர்வாகக் குழுத் தெரிவை எதிர்த்து திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தெரிவு செய்யப்பட்ட தலைவருக்கும் புதிய நிர்வாக சபைக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட நிலையில் இந்தப் புதிய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், மாவை சேனாதிராசா, பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் பதவிகளில் தொடர்வதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே இந்த வழக்குத் தாக்கல் ☞ 2

## கொழும்பில் இன்று பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு கல்வி வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## வரவு செலவுத் திட்டம் ஒத்திவைப்பு

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் தாக்கல் ☞ 2

## சுயேச்சை 17இன் அறிமுகம் நேற்று



யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சை குழு - 17 இல் ஊசி சின்னத்தில் போட்டியிடுவோரின் அறிமுக நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வைத்திய சாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சர் அருச்சுனா தலைமையிலான இளம் வேட்பாளர்களே சுயேச்சை குழு 17இன் கீழ் போட்டியிடுகின்றனர்.

அருச்சுனா, ☞ 2



## லஞ்சம் ஊழலை ஆளும்தரப்பு சிறிதளவும் சகித்துக்கொள்ளாது

### அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்

இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள மாட்டோம். ஏற்கனவே உள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களில் சில விடயங்கள் குறித்து நாம் ஏற்கனவே விசாரணைகளைத் தொடங்கிவிட்டோம். நெறிமுறையான நிர்வாகம், ஊழலை ஒழித்தல், ☞ 8

## கடன்மறுசீரமைப்பின் இறுதிக்கட்டத்தில் நாடு

### அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நிறைவுக்குக் கொண்டு வரும் செயற்பாடுகளில் இலங்கை இறுதிக்கட்டத்தில் உள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். ☞ 2

### தேசிய மக்கள் சக்திக்கு முதுகெலும்பிருந்தால்

## வடக்கு கிழக்கு ஊழலையும் விசாரிக்கட்டும் பார்க்கலாம்

### கஜேந்திரகுமார் சவால்

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு முதுகெலும்பிருந்தால் வடக்கு கிழக்கில் இடம்பெற்றிருக்கக்கூடிய ஊழல் தொடர்பிலும் விசாரணை நடத்தட்டும் பார்க்கலாம் என்று சவால் விடுத்துள்ளார் தமிழ் தேசிய முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல்சம்பந்தப்பட்ட விடயத்தில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கப் பின்னடிக்கும் என நம்பவில்லை. ஏனென்றால் இந்த விடயத்தில் ஆட்சியாளர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தென்னிலங்கையில் இருக்கக்கூடிய மக்களுடைய அழுத்தம் என்பது மிகவும் அதிகமானது.

தேசியமக்கள்சக்திக்கு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

திரும்பத் திரும்பக் கேட்கிறார். தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தாவிய நீங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியின் ஊடாக வேட்பாளர் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டீர்கள் என்பதே அவரது கேள்வியின் சாராம்சம். அம்மணியோ அதற்கு நேரடியாகப் பதில் சொல்கிறாரே இல்லை. "அது முக்கியமில்லை", "அதைக் கேட்டு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்", "நான் ஜனநாயகக் கூட்டணியில் வேட்பாளர், யாரூடாக வந்தேன் என்பது முக்கியமில்லை" என்றெல்லாம் மழுப்புகிறார். கடைசிவரையில் ஒற்றைவார்த்தையில் அவர் அந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேயில்லை.

அவருக்கும் ரெலோவின் யாழ். மாவட்ட வேட்பாளரான சுரேன் குருசுவாமிக்கும் இடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னரே அம்மணி கட்சி தாவினார் என்பதை ஏற்கனவே நான் குறிப்பிட்டிருந்தேன். அதன் பின்னர் சுரேனின் திருகுதாளங்கள் குறித்து மற்றவர்கள் வெருட்டிய வெருட்டில் அம்மணி இப்போது புளொட்டின் கைகளில் அடைக்கலமாகியுள்ளார் என்பதையும் தெரியப்படுத்தியிருந்தேன். அப்படிப்பட்ட நிலையில் தான் எந்தக் கட்சிக்கு ஊடாக ஜனநாயகக் கூட்டணிக்கு வந்தார் என்பதை பகிரங்கமாகத் தெரிவிப்பதில் அந்த அம்மணிக்கு என்ன பிரச்சினை என்று துளாவினேன்.

எக்கச்சக்கமான பிரச்சினை ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அம்மணிக்கும் ரெலோவின் சுரேனுக்கும் இடையில் தொடக்கத்தில் ஓர் இணக்கப்பாடு இருந்தது. அதற்கிடையில், புளொட்டின் தென்மராட்சி செயற்பாட்டாளர்களில் ஒருவரான கிஷோர்தான் (இவர்தான் மருத்துவர் அருச்சுனாவிற்காக பிணைக் கையெழுத்து வைத்துவிட்டு பின்னர் அதிலிருந்து வெளியேறுகின்றேன் என்று அறிவித்தவர்) வேட்பாளர் மனுவில் கையெழுத்து வைப்பதற்காக அவரை புளொட் தலைவர் சித்தார்த்தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றவர். இதை எப்படியோ அறிந்த சுரேன் அங்கு சென்றுவிட்டார். சசிகலா வேட்புமனுவில் கையெழுத்து வைத்த படத்தைப் பார்த்தால் அது தெரியும். சித்தர், சுரேன், கிஷோர் ஆகியோர் அந்தப் படத்தில் இருப்பர். அங்கு வைத்து சசிகலாவை அழைத்து வந்ததற்காக சுரேன் கிஷோரைக் கடிந்துகொண்டிருக்கிறார். தானே அம்மணியை அழைத்து வந்திருப்பேன், நீ ஏன் அவசரப்பட்டனிர் என்பதுதான் அவரது கடிந்துகொண்டதன் சாராம்சம்.

புளொட்டின் முன்னெடுப்புக்கள் குறித்து கரவுகொண்டதன் காரணத்தால் (பாம்பின்கால் பாம்பு அறியும்தானே) உசாரடைந்த சுரேன் வேட்புமனுவில் கையெழுத்து வைப்பதற்கு முன்பாகவே ரெலோவின் உறுப்பினர் படிவத்தில் அம்மணியிடமிருந்து கையெழுத்து வாங்கிவிட்டார். ஆக மொத்தத்தில் அம்மணி இப்போது ரெலோவின் உத்தியோகபூர்வ உறுப்பினர். ஆனால், சுரேனோடு சேர்ந்தால் உங்களுக்கு விழும் வாக்குகளும் விழாது என்றும், அவரோடு சேர்ந்து மாமனிதர் ரவிராஜ்ஜின் பெயரைக் கெடுத்துவிடாதீர்கள் என்றும் மற்றவர்கள் கொடுத்த அழுத்தத்தில் அம்மணி இப்போது புளொட் பக்கமாகச் சாய்வதில்தான் ஆர்வம் காட்டுகிறார். அதனால்தான் அந்த தொலைக்காட்சி பேட்டியில் அவர் யார் ஊடாக ஜனநாயகக் கூட்டணிக்குத்தான் வந்தார் என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை.

இப்போது, சித்தர், கஜதீபன் படங்களோடு சசிகலாவின் படத்தையும் போட்டு சுவரொட்டிகள் அடிப்பதுடன் சசிகலாவின் பரப்புரைக்குத் தேவையானவற்றை பார்ப்பது என்று புளொட் மும்முரமாக நிற்கின்றது. மற்றப் பக்கத்திலோ சசிகலாவின் பரப்புரைக்கும் என்று சொல்லி புலம்பெயர் பெருநிறுவன முதலாளியிடம் (அவரது கட்சி ஒன்றும் இந்தத் தேர்தலில் களமிறங்கி இருக்கிறது) இருந்து 3 கோடி ரூபாய் வாங்கப்பட்டிருப்பதாகவும் தகவல். அதனால் அந்தத் தரப்பும் சசிகலாவின் படத்தைப் போட்டு பரப்புரைக்குத் தயாராகி வருகின்றது. மொத்தத்தில் அம்மணி பிச்சைவேண்டாம் நாயைப் பிடி என்பதைப் போல அரசியலே வேண்டாம் என்று ஓடவிட்ட பின்னர்தான் ஓய்வார்கள் போலுள்ளது.

.......................

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்கள் தமது கணக்கு அறிக்கையை அதாவது வந்த காசு செலவழித்த காசு என்பவற்றுக்கான கணக்கு விவரத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்குவதற்கு ஒக்டோபர் 13 வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஒக்டோபர் 12 வரை வெறும் 13 பேர் மட்டுமே அந்த அறிக்கையை வழங்கியிருந்தார்கள். இருந்தாலும் மறுநாள் பிற்பகல் 3 மணிக்கு இடையில் ஏனைய 22 பேர் தமது அறிக்கைகளைக் கொடுத்துவிட்டார்கள். அதாவது கடைசி நேரத்தில் கொடுத்தார்கள். அப்படியும் கொடுக்காது இருப்பவர்கள் வெறும் மூன்று பேர் மட்டும்தான். அவர்களில் நமக்குத் தெரிந்த முக்கியமானவர் அரியநேத்திரன், மற்றைய இருவரும் பத்திரமுல்லை சீலரத்ன தேரரும் சரத் கீர்த்திரத்னவும்தான்.

பாவம் அரியநேத்திரன். அவருக்கு தான் வேட்பாளராக இருந்த பின்னணியில் வந்த காசு குறித்தும் தெரியாது போன காசு குறித்தும் தெரியாது. அவர் வெறும் பலிக்கடா மட்டும்தான். தேசியம் என்ற பெயரில் அவரை முன்னிறுத்தி சங்கு சின்னத்தைப் பெற்று அவருக்கே சங்கு ஊதிவிட்டு சங்கையும் கொண்டு போய்விட்டார்கள். ஆனாலும் தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பதில் சொல்ல வேண்டியவர் அவர்தான். ஆனால், இனி எங்கிருந்து கணக்குக் காட்டுவது என்பதுதான் கேள்வி.

அவரை வேட்பாளராக நிறுத்திய பொதுக்கட்டமைப்பு இப்போது இல்லை என்று ஞாயிற்றுக்கிழமை நிலாந்தனும் அவரது பரிவாரங்களும் அறிவித்து விட்டார்கள். அப்படியானால் ஜனாதிபதித் தேர்தல் கணக்கு வழக்கு விவரம் என்னாயிற்று என்ற கேள்விக்கு அது உரியவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நிலாந்தன் பதலளித்தார். ஆனால் தேர்தல் ஆணைக்குழு அப்படியொரு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்கிறது. அப்படியானால் அந்த "உரியவர்கள்" யார் என்பதை நிலாந்தன்தான் விளக்கவேண்டும். பொதுக் கட்டமைப்பின் நிதியாளராக இருந்து அதனைக் கையாண்டவரும் ஒரு புலம்பெயர் முதலாளிதான் என்று கேள்வி. இனி அவர் ஏதாவது பார்த்து இரக்கப்பட்டு ஒரு கணக்கை சமர்ப்பிப்பாரோ என்னவோ!

ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கின்றது. அரியநேத்திரன் தரப்புக்கு எங்கிருந்து காசு வருகிறது என்பது பற்றி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் ஏற்கனவே விசாரித்தார்கள் என்று, அரியநேத்திரனுக்காக இணையப் பரப்புரையில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் அரியநேத்திரனுக்கு பின்னால் பிரச்சினைகள் காத்திருக்கலாம்.

..............

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரையும் சங்கு சின்னத்தையும் களாவடிக்கொண்டு போய்விட்டார்கள் என்று தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் சுமந்திரன் ஞாயிற்றுக் கிழமை வேட்பாளர் அறிமுக உரையில் சுட்டிக்காட்டியதற்கு புளொட் தலைவர் சித்தார்த்தன் ஒரு பதில் சொல்லியிருக்கிறார். தனது வீட்டில் சில செய்தியாளர்களைச் சந்தித்தபோது, மாவையரிடம் இருந்து வீட்டை (தமிழ் அரசின் சின்னம் வீடு) திருடியவர்கள், இந்தத் திருட்டைப் பற்றிப் பேசக்கூடாது என்ற வகையில் பதில் சொல்லியிருக்கிறார். சுமந்திரனின் உரை பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு, "தான் 70 வருடங்களாகக் கட்டிக் காத்த வீட்டை தன்னிடமிருந்து திருடிக்கொண்டு போய்விட்டார்கள் என்று மாவையர் கலைப்பட்டார் என்று தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரை நான் சந்த்தபோது சொன்னார்" என்றார் சித்தர்.

அதுவும்போக, சின்ன டிரிஎன்ஏ என்பதன் விரிவு ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி தான் என்றும் அது பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பே பதவு செய்யப்பட்டது என்றும் அது பற்றி சுமந்திரனுக்குத் தெரிந்திருக்காது என்றும் தெரிவித்தார். ஆனால் உண்மை என்னவென்றால் டிரிஎன்ஏ (ம்வீஹிபு) என்ற ஆங்கில எழுத்துக்களில் டி என்ற எழுத்தை மிகச் சின்னதாக்கி ரிஎன்ஏ என்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு (கூட்டணி என்பதற்குப் பதிலாக கூட்டமைப்பு) என்று பயன்படுத்தியவர்கள் புளொட் அமைப்பினரே. இந்தக் கூட்டணியின் தொடக்கத்திலிருந்து சுரேஸ் பிரேமச்சந்திரன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று பெயரைச் சரியாகப் பயன்படுத்தி வந்தபோதும் "சுரேஸ்"க்கு விளங்கவில்லை" என்று கூறிக்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று பயன்படுத்தி வந்தவர்கள் புளொட்டும் ரெலோவுமே! இப்போது அது அம்பலப்பட்டு, அசிங்கப்பட்டு நின்றதும் கட்சியின் பெயர் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்று சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறார் சித்தர். பூனை கண்ணை மூடிக்கொண்டாலும் உலகம் இருண்டுவிடாது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

# பல்கலை. மானிய ஆணைக்குழு நேற்று கூண்டோடு பதவி விலகல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகியுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய நேற்று மாலை தமது பதவி விலகல் கடிதங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

"நான், துணைத் தலைவர் மற்றும் 5 உறுப்பினர்களும் எமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளோம்" என்றார் அவர்.

இந்த ஆணைக்குழு 2020ஆம் ஆண்டு பதவியேற்றது. 2025 மார்ச் மாதம் வரையில் அதன் பதவிக் காலம் இருந்த போதிலும் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அது கலைக்கப்படவுள்ளது.

புதிய, செயற்றிறன் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாகவே இந்த ஆணைக்குழு உறுப்பினர்களை வெளியேறும்படி கேட்கப்பட்டதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான மார்க்கண்டு நடராசா சட்டத்தரணி தவேந்திரராசா டினேஸ் ஊடாக இந்த மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி கலாநிதி குருபரனால் வரையப்பட்ட இந்த வழக்கில், குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தலை பிரசுரிப்பதற்கான கட்டளைக்கு அமைவாக, மாவை சேனாதிராசா, மருத்துவர் சத்தியலிங்கம், சேவியர் குலநாயகம், ஆகிய எதிராளிகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு கூட்டப்பட்டு முறையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்வரை கட்சியின் நிர்வாகப் பதவி எதனையும் வகிக்கத் தகுதி அற்றவர்கள் என்று நிரந்தர தடைக் கட்டளை பிறப்பிக்கப்படவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

மாவை சேனாதிராசா, மருத்துவர் சத்தியலிங்கம், ஆகிய எதிராளிகள் 27.01.2024இற்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீஜூமானங்களும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை என்ற வகையில் அவை வெற்று வெறிதானவை என்று கட்டளை பிறப்பிக்கப்படவேண்டும் என்றும் –

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் என்ற அடிப்படையில் கட்சியின் மத்திய செயற்குழு என்ற பெயரில் எவ்விதமான கூட்டங்களையும் அவர்கள் கூட்டக்கூடாது என்ற இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்படவேண்டும் என்றும் –

சேனதிராசா இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்றும் –

இடைக்கால தடைக் கட்டளை பிறப்பிக் கப்படுவதோடு சத்தியலிங்கம் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்ற இடைக்கால தடைக் கட்டளையும் பிறப்பிக்கப்படவேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை நவம்பர் 18 விசாரணைக்கு எடுப்பதென நீதிமன்று தீர்மானித்துள்ளது.

## கொழும்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவும் சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேல்மாகாண பதில் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். காலநிலையைக் கருத்தில் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை விடுமுறை குறித்து முடிவெடுக்கலாம் என்று கல்வி அமைச்சு அதிகாரம் வழங்கியிருக்கின்றது.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பில் மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி செயலாளர் அல்லது மாகாண கல்விப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுக்கலாம் என கல்வி அமைச்சு அறிவுறுத்தியிருந்தது.

இதேவேளை, நிலவும் சீரற்ற வானிலை காரணமாக தென் மாகாணத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண ஆளுநரின் உத்தரவுக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, அம்பலாங்கொடை கல்வி வலயத்தில் பலபிடிய கனிஷ்ட வித்தியாலயம், பலபிடிய ஷ்ரீபதி வித்தியாலயம், பலபிடிய மாதுவ கனிஷ்ட வித்தியாலயம், ஹிக்கடுவை மலவென்ன வித்தியாலயம், அம்பலாங்கொடை குலரத்ன வித்தியாலயம் ஆகியவற்றிற்கும் காலி கல்வி வலயத்தில் கனேகொட ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட வேண்டிய நவம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதே இதற்குக் காரணம்.

இதனால், 2025ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்கால நியமக் கணக்கை சமர்ப்பித்து ஏற்றுக்கொண்டதன் பின்னர் வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்க புதிய ஆளும்தரப்பு தயாராகி வருகிறது.

## சுயேச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மயூரன், யோகபாலன், கௌசல்யா, அறிவன்பன், பத்மலோஜினி, கிருஷ்ணானந், சிறிபிரகாஷ் மற்றும் பவித்திரா ஆகியோர் இந்தக் குழுவில் போட்டியிடுகின்றனர்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கையின் உத்தியோகபூர்வ கடனாளிகள் குழுவும் சர்வதேச நாணய நிதியமும், பிணைமுறிக்கடன் வழங்குநர்களும் அண்மையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் அனைத்தும் தேவைகள் மற்றும் இலக்குகளுக்கு இணங்க இருப்பதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன" என்றார் அமைச்சர்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்து விட்டால், சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவித் திட்டத்தின் மூன்றாவது மீளாய்வுக்கு இலங்கையால் செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் உறுதிப்படுத்த முடிவதுடன், நிலைத்தன்மையின் அடித்தளத்தை வலுப்படுத்திய பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் திங்கட்கிழமை சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்து அனைத்து மக்களின் மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க ஆளும்தரப்புச் செயற்படும் எனவும் அமைச்சர் ஹேரத் தெரிவித்தார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தேவை இருக்கின்றது. தாங்கள் ஏனைய அரசுகளை விட வித்தியாசமானவர்கள் என்பதைக் காட்டவேண்டிய தேவை அது. எனவே ஊழல் ஒழிப்பில் மட்டும்தான் அவர்கள் மனம் விரும்பி செயற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த நடவடிக்கையின் ஊடாக அவர்களுக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக் கட்சியால்தான் தமிழ் மக்கள் தனித்துவமாக வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது

## முன்னாள் எம்.பி. ஞா.சிறிநேசன் இடித்துரைப்பு







தமிழரசுக்கட்சி ஒன்று இருப்பதன் காரணமாகவே இந்த மண்ணில் தமிழ் மக்கள் தனித்துவமாக வாழக்கூடிய ஒருசூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மறந்துவிடக்கூடாதுஎனஇலங்கைதமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் ஊடாக எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு செங்கலடியில் நடை பெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் ஏறாவூர்ப்பற்று கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு செங்கலடி சௌபாக்கியா மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சியின் முன்னாள் செயலாளர் கி.துரைரா ஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சாணக்கியன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது தமிழரசுக் கட்சியின் ஊடாக எதிர்வரும் நாடாளுமன்றதேர்தலில்மட்டக்களப்புமாவட்டத்தில்போட்டியிடும் வேட்பாளர்கள்அறிமுகம்செய்து வைக்கப்பட்டதுடன் அவர்கள் ஆதரவாளர்களால் கௌரவிக் கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கட்சியின் உபதலைவர் பொன். செல்வராஜா அவர்கள் மறைந்து ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு அவருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஞா.சிறிநேசன் –

தமிழரசுக்கட்சி தமிழர்களுக்கு என்ன செய்தது என்பதை அனைவரும் இலகுவாக கேட்பார்கள். ஆனால் தமிழரசுக்கட்சி ஒன்று இருப்பதன் காரணமாகத்தான் இந்த மண்ணில் தமிழர்கள் தனித்துவமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது.

புத்தளம்,நீர்கொழும்பு பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்த நிலையில் அங்கு தமிழரசுக்கட்சியின் ஆதிக்கம் குறைந்து தேசிய கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்த காரணத்தால் அங்கு வாழ்ந்த தமிழர்கள் அரைகுறை தமிழர்களாக, தமிழை மறந்தவர்களாக மாறியிருக்கின்றார்கள்.

ஆனால் வடக்கு, கிழக்கில் 1949ஆம் ஆண்டு தொடக்கம் எமது கட்சி ஆற்றிய பணிகள் காரணமாக தமிழர்கள் இன்றும் தனித்துவமாக தமது பண்பாடு களுடன் தலைநிமர்ந்து நிற்கின்றார்கள் என்பதை மறக்கக்கூடாது.

தமிழரசுக்கட்சியானது உரிமையா சலுகையா எனக்கேட்கின்றபோது எங்களுக்கு உரிமைவேண்டும் என்று சொல்லுகின்ற கட்சியாகும். – என்றார்.(05)

# மயிலிட்டி கலைமகள் வித்யாலயத்திற்கு புதிய கட்டடம் வான்படையால் கையளிப்பு



அந்த வகையில் யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைவிமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டு பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

அத்தோடு யாழ்ப் பாணம் மாவட்டத்தை சேர்ந்ததெரிவுசெய்யப்பட்ட 16 பாடசாலைகளுக்கு மாணவர்களுக்கான புத்தகங்களும்கையளிக்கப்பட்டன. அத்துடன்விமானப்படைதளபதிக்கு கலைமகள் வித்தியாலயத்தின் அதிபரால் நினைவு சின்ன மும் பாடசாலையில் 200 ஆவது வருட நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்டபுத்தகமும்வழங்கி வைக்கப்பட்டன. (05)



இலங்கை விமானப்படை 73 ஆவது வருடத்தை முன்னிட்டு வட மாகாணத்தை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட நட்பின் சிறகுகள் எனும் அமைப்பின் கீழ் ‘என்னிடமிருந்து வடக்கிற்கு ஒரு புத்தகம்’ எனும் செயல் திட்டத்தின் ஊடாக வட மாகாணத்தில் 73 பாடசாலைகளை புனர்நிர்மானம் செய்தல் 73 ஆயிரம் புத்தகங்களை பாடசாலை மாணவர்களுக்காக வழங்குதல் 73 ஆயிரம் மரக்கன்றுகளை வட மாகாணம் முழுவதும் நடுதல் எனும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.



# இணைய வழி மோசடியில் ஈடுபட்ட மேலும் 31 சீனப் பிரஜைகள் கைது

இருவெவ்வேறுபிரதேசங்களில்ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இணையவழி மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் 31 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கண்டி , அணிவத்த பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த 16 சீனப் பிரஜைகள் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெலிக்கடை, இராஜகிரிய பிரதேசத்தில் உள்ள தொடர்மாடி குடியிருப்பொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த 15 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவியரீதியில் இம்மாதத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்–

ஹங்வெல்ல பிரதேசத்தில் கடந்த 6 ஆம் திகதி 30 சீனப் பிரஜைகளும் 4 இந்தியப் பிரஜைகளும் 6 தாய்லாந்து பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். நாவல பிரதேசத்தில் கடந்த 7 ஆம் திகதி 19 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி 20 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி, குண்டசாலை பிரதேசத்தில் கடந்த 12 ஆம் திகதி 120 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட் டுள்ளனர்.(05)

# ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து விலகினார் ஹிருணிகா



ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பான ஐக்கிய மாதர் சக்தியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து தான் விலகுகிறார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது அமைப்பாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்றவில்லை என கட்சியில் இருந்து சுமத்தப்பட்ட குற்றச்சாட்டால் ஏற்பட்ட விரக்தியே தனது பதவி விலகலுக்குக் காரணம் என ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

பதவியிலிருந்து விலகிய போதிலும், கட்சியின் செயற்பாட்டு உறுப்பினராக தொடர்ந்தும் இருந்து வருவதாகவும், 2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் மீண்டும் தம்மை நாடாளுமன்றத்திற்கு பொது மக்கள் தெரிவு செய்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்னும் கடுமையான சட்டங்கள் வேண்டும்

இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள மாட்டோம் என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே உள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன.

நெறிமுறையான நிர்வாகம், ஊழலை ஒழித்தல், அரச சேவையில் வினைத்திறன், சட்டத்தின் ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மை ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு ஜனாதிபதி அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார்.

பொருளாதார வெற்றியுடன் இந்த முக்கியமான தூண்கள் இணைந்திருக்கவேண்டும் என நாங்கள் கருதுகின்றோம், நாங்கள் மக்களுக்கு வழங்கியுள்ள உறுதிமொழிகளிற்கு ஏற்ப இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள மாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மோசடி மற்றும் ஊழலுக்கு மன்னிப்பு வழங்கக்கூடாது என்ற கொள்கையின் கீழ் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு பல முக்கிய விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் இடைநடுவில் நிற்கும் விசாரணைகள் துரிதப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சர் கூறுவதைப் போன்று இலஞ்ச, ஊழல் விசாரணைகள் நேர்மையாக நடத்தப்படுவதையே மக்கள் விரும்புகின்றார்கள். இலங்கை என்கிற நாடு சீரழிந்தமைக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் இலஞ்ச, ஊழல் ஒரு மிக முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரது சகோதரரான பஸில் ராஜபக்சவை "மிஸ்டர் 1–0%" என்று அழைக்குமளவிற்கு ஊழல் மலிந்து போயிருந்தது. மைத்திரி – ரணிலின் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னர் ரணிலின் ஆட்சிக்காலத்திலும்கூட பெரும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. ராஜபக்சக்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களில் மைத்திரி – ரணில் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் எதுவும் வெற்றி பெறவில்லை. இவற்றையும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவே மேற்கொண்டது. அந்த ஆணைக்குழு விசாரணை நடத்திய எந்தவொரு வழக்கிலும் அது தண்டனை பெற்றுக்கொடுத்ததாகத் தகவல் இல்லை. அத்தகையதொரு நிலையில் அதே ஆணைக்குழு மூலம் மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது பல கேள்விகளையும் எழுப்புகின்றது.

மைத்திரி – ரணில் ஆட்சியிலும் பின்னர் ரணிலின் ஆட்சியிலும் இலஞ்சம் ஊழல் குறித்து சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டபோதும் அவை வெறும் கண்துடைப்புக்கானவையாகவே இப்போதுவரையில் காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இத்தகைய சட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு இலஞ்ச, ஊழலுக்கு எதிராக தீவிர சட்டங்கள் கொண்டுவரப்பட்டால் ஒழிய குற்றவாளிகளைத் தண்டிப்பது மிகக் கடினம் என்றே தோன்றுகின்றது. இலஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை மட்டுமன்றி அரச அதிகாரிகளையும் தண்டிக்கவேண்டும். ஏனெனில் ஊழலின் ஊற்றுவாய்களாக அரச அதிகாரிகளில் பலரும் செயற்பட்டார்கள் என்பது வெளிப்படை. அரச நிர்வாகப் பொறிமுறையில் இருந்து ஊழல் அகற்றப்படாத வரையில் தூய நிர்வாகமும் நேர்மையான மக்கள் சேவையும் கிடைக்காது. அவற்றை அடைவதற்கு இன்னும் கடுமையான சட்டங்கள் தேவை. அவற்றின் மீது ஆட்சியாளர்களின் கவனம் திரும்பவேண்டும்.

# தமிழ்ப் பொது வேட்பாளரை அம்மணமாக்கிய நிலாந்தனும் பரிவாரங்களும்

**நக்கீரன்**

எல்லோருக்கும் சொல்லும் பல்லி தான் மட்டும் கூழ்ப் பானைக்குள் விழுந்ததாம்.

பத்தி எழுத்தாளர் நிலாந்தன் சங்குச் சின்னத்தை சனநாயக ததேகூயிடம் பறிகொடுத்த அல்லது தாரைவார்த்த கதையைத்தான் சொல்கிறேன். இதனால் அவரது சங்கை கெட்டதுதான் மிச்சம்.

சனநாயக ததேகூயில் இருக்கும் கட்சிகள் எல்லாம் முன்னாள் ஆயுதக் குழுக்கள். ஒருவரையொருவர் சுட்டும் வெட்டியும் கொன்றவர்கள். தமிழ்த் தேசியத்தை மாற்றானுக்-குக் காட்டிக்கொடுத்தவர்கள். அதிலும் புளொட் மே 18, 2009 வரை விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போராடிய ஒட்டுக் குழு. அதன் தலைவர் சித்தார்த்தன் வி.புலிகளை தோற்கடிக்கப்பட்டதில் புளொட்டுக்கும் கணிசமான பங்குண்டு என்று மார்தட்டியவர்.

மேற்குலக நாடுகள் போரின் இறுதிக் கட்டத்தில் ஒரு போர் நிறுத்தம் வேண்டுகோளை முன்வைத்தபோது, சித்தார்த்தன் அந்த ஆலோசனை வி.புலிகளுக்கு உயிர்க்காற்று (நுமுதீஆஎஜ) கொடுத்ததற்குச் சமம் என்று எள்ளி நகையாடியவர். இவர்களோடுதான் நிலாந்தன் கை கோர்த்து ஒரு துன்பியல் நாடகத்தை பொது வேட்பாளர் என்ற போர்வையில் அரங்கேற்றினார். அந்தப் பொது வேட்பாளர் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்து மூக்குடைபட்டாலும் 'கீழே விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்று சொன்னவன் மாதிரி 'இது தொடக்கம். அடுத்த வாட்டி வென்று காட்டுகிறோம்' என மொட்டைத் தலைச்சி மயிரைச் சிலிர்த்துக் காட்டிய மாதிரி வாய்வீரம் பேசுகிறார்.

சனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளரும் ஊடகப்பேச்சாளருமான துளசி 'தமிழ்த் தேசியத்திற்காக மக்கள் ஓரணியில் திரள வேண்டும் என்பதை மக்கள் புகட்டியுள்ளனர்' எனப் பகிடி விடுகிறார்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல பொது வேட்பாளர் அரியநேத்திரன் அவர்களது சொந்தத் தொகுதியான பட்டிருப்பில் அவருக்கு விழுந்த வாக்குகள் 12,356 (13 விழுக்காடு) மட்டுமே. மாறாக சஜித் பிரேமதாச பெற்ற வாக்குகள் 26,512 (43.09 விழுக்காடு), இரணில் விக்கிரமசிங்க பெற்ற வாக்குகள் 18,845 (29 விழுக்காடு) ஆகும். நிலாந்தன் இடத்தில் ஒரு மானஸ்தன் இருந்திருந்தால் முடிவு விபரிதமாககியிருக்கும்.

**நிலாந்தன் அண்மையில் எழுதிய கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்,**

'தமிழ்ப் பொதுப் புத்தியை பொறுத்தவரை மக்கள் பிரதிநிதிகள் மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றது அல்லது தமது பினாமிகளின் ஊடாக மதுச்சாலைகளை நிர்வகிப்பது என்பது அவர்களைத் தகுதி நீக்கம் செய்யக்கூடியது. ஆனால் தன் அரசியல் எதிரிகளை அவ்வாறு தகுதி நீக்கம் செய்ய முற்படும் சுமந்திரன் அணி அந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தகுதியுடையதா? ஏனெனில் சுமந்திரன் எப்படிப்பட்ட ஓர் அரசியலை செய்கின்றார்? தமிழ் மக்களைச் சிதறடிக்கும் அரசியலைத்தான் அவர் செய்து வருகிறார்.

அவர் எல்லாவற்றையும் கொட்டிக் குலைக்கிறார். தனது சொந்தக் கட்சியையும் கொட்டிக்குலைக்கிறார். அவரும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக்கூறாத ஒருவர்தான். அதைவிட முக்கியமாக, தமிழ் மக்களுக்கு எதிரான இனஅழிப்புத் தொடர்பில் பொறுப்புக்கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாசாவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என்று அவர் கேட்டார்" என்று சொல்லியிருக்கிறார்.

இங்கே அவர் முன்னாள் நா.உறுப்பினர் சுமந்திரன் அவர்களை தூற்றுவதில் பொருள் இல்லை. முதலில் சஜித் பிரேமதாசாவை ஆதரிக்கும் முடிவு சுமந்திரன் எடுத்தது அல்ல. அந்த முடிவை எடுத்தது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உயர்பீட அதிகாரம் படைத்த மத்திய குழு ஆகும். அதுவும் அந்த முடிவு எழுந்தமானத்தில் எடுத்த முடிவு அல்ல. மத்திய குழு ஒருமுறைக்கு ஐந்துமுறை கூடி எடுத்த முடிவு. மூன்று முக்கிய கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை ஆராய்ந்து பார்த்த பின்னர் எடுத்த முடிவு. ஆனால் 'நாய்க்கு எங்கே கல்லெறிபட்டாலும் காலைத்தான் தூக்குமாம்' என்பதுபோல நிலாந்தன் அந்த முடிவு சுமந்திரன் அணியின் முடிவு என மடைமாற்றம் செய்யப் பார்க்கிறார்.

2024இல் அல்ல 2019இல்கூட இதஅக சஜித் பிரேமதாசாவைத்தான் ஆதரித்தது. இரண்டு தேர்தலிலும் பெரும்பான்மை தமிழ்மக்கள் இதஅக கேட்டுக்கொண்டதற்கு இசைவாக சஜித் பிரேமதாசாவை ஆதரித்து வாக்களித்தார்கள். இம்முறை வடக்கு - கிழக்கில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்களிலும் சஜித் பிரேமதாசா மொத்தம் 6,76,681 (43.09 விழுக்காடு) வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்தார். மாறாக நிலாந்தனின் பொது வேட்பாளர் வட கிழக்கில் 208,479 (20.56 விழுக்காடு) வாக்குகளை மட்டும் பெற்று படுதோல்வி அடைந்தார். இதில் வடக்கில் 143,065 (26.57 விழுக்காடு) வாக்குகளும் கிழக்கில் வெறுமனே 65,414 (13.39 விழுக்காடு) வாக்குகளும் மட்டும் கிடைத்தன. இந்தத் தோல்வியை மறைக்கவே நிலாந்தன் சுமந்திரன் மீது பாய்கிறார்!

இதன் மூலம் வட கிழக்கில் வாழும் தமிழ் வாக்களர்களில் 79.24 விழுக்காடு வாக்காளர்கள், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக வாக்களித்து அவரை நான்காவது இடத்துக்குத் தள்ளினார்கள்.

சுமந்திரன் 'எல்லாவற்றையும் கொட்டிக் குலைக்கிறார். தனது சொந்தக் கட்சியையும் கொட்டிக்குலைக்கிறார். அவரும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறாத ஒருவர்தான்' என்கிறார் நிலாந்தன். தமிழ் அரசுக் கட்சி பலமாகத்தான் இருக்கிறது. அதிலிருந்து சில பதவி வெறியர்கள் வெளியேறுவதால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது. கட்சியில் இருந்து இரண்டொருவர் வெளியேறியதால் வீடு இப்போ தூய்மை ஆக இருக்கிறது! அது சரி. சுமந்திரன் எல்லாவற்றையும் கொட்டிக் குலைக்கிறார். தனது சொந்தக் கட்சியையும் குலைக்கிறார் என ஊழையிடும் நிலாந்தனின் யோக்கியதை என்ன?

சனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் என்று ஒருவரை நிறுத்தியதன் மூலம் தமிழ் மக்களது ஒற்றுமையைக்குலைக்கவில்லையா? சங்கை சனநாயக ததேகூ களவாடியது போல தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரியநேத்திரனை களவாடவில்லையா? பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றி தமிழ் அரசுக் கட்சியோடு பேசாது ஆயுதக் குழுக்களோடு கைகோர்த்ததற்குப் பெயர் ஒற்றுமையா?

மேலும் சுமந்திரன் 'தமிழ் மக்களுக்கு எதிரான இனஅழிப்புத் தொடர்பில் பொறுப்புக்கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாசாவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டார்' என்று நிலாந்தன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்கிறார். ஒரு வாதத்துக்கு அதனை அப்படியே வைத்துக் கொள்வோம். ஆனால், பெரும்பான்மையான தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசாவுக்குத்தானே வாக்களித்தார்கள்? அந்த மக்கள் அறிவிலிகளா? தற்குறிகளா? இல்லை அந்த மக்களது தீர்ப்பைச் செரிக்க முடியாது அதனைக் கொச்சைப்படுத்தும் நிலாந்தன் அறிவிலியா! அல்லது தற்குறியா?

'தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கு நிலையில் இருந்து தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள நேர்மையற்றவர்கள், கண்ணியமற்றவர்கள், நயவஞ்சகர்கள், நசியல்பேர்வழிகள், வழிந்தோடிகள், டீலர்கள் போன்றவர்களைத் தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும்' என்கிறார் நிலாந்தன். இது நல்ல யோசனை. முதலில் விக்னேஸ்வரனிடம் இருந்து செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், பிரேமச்சந்திரன், சிறிகாந்தா வரை தொடங்குவோம். இவர்கள்தான் தமிழ்த் தேசியத்தை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்று வயிறு வளர்க்கிறார்கள். இவர்களோடுதான் நிலாந்தன் கூட்டு வைத்திருந்தார். எனவே அவரும் தமிழ்த் தேசியத்தை விற்று வயிறு வளர்ப்பவர்தான்.

நிலாந்தன் எதற்கெடுத்தாலும் மற்றவர்களை, குறிப்பாக மக்கள் பிரதிநிதியான சுமந்திரனை புழுதிவாரித் தூற்றுவதை நிறுத்த வேண்டும். அப்படித் தூற்றுவது அறிவீனம் மட்டுமல்ல படு அயோக்கியத்தனம்.

தனது அரசியல் எதிரிகளை சுமந்திரன் சிறுமைப்படுத்தித் தோற்கடிக்க முயற்சிக்கிறாராம். தமிழ் மக்களைச் சிதறடிக்கும் ஓர் அரசியலை முன்னெடுக்கிறாராம். தனது அரசியல் எதிரிகளைக் குற்றஞ்சாட்டுவதன் மூலம் அவர் தன்னை குற்றமற்றவராகக் காட்டப் பார்க்கிறாராம். அதாவது சாராய உரிமங்கள் பெற்றவர்கள் எல்லாம் உத்தமர்கள், ஒழுக்கசீலர்கள், நாணயஸ்தர்கள், எனவே அந்தப்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# தமிழ்ப் பொது வேட்பாளரை...

4ம் பக்க தொடர்ச்சி..........

புனிதர்கள் பற்றி எதுவும் சுமந்திரன் குறைசொல்லக்கூடாதாம்!

வேறுவிதமாகச் சொன்னால் சுமந்திரனைத் தாக்குவதற்கு நிலாந்தன் சாராய உரிமங்களைப் பெற்ற நா.உறுப்பினர்களுக்கு லாலி பாடுகிறார். தலையில் தூக்கி வைத்து ஆடுகிறார். அதனை நியாயப்படுத்துகிறார். அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கு முதலில் வார் என்கிறார்.

நிலாந்தன் தன்னை மெத்தப் படித்தவர் மாதிரிக் காட்டுவதற்கு சில வாலாயமான சொற்பதங்களைப் பயன்படுத்துகிறார். அவை எல்லாம் ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடர்கள். எடுத்துக் காட்டாக மக்களின் திரட்சி என்பது துழிவிவி துலியிளவிமிழிமிஷ்லிஜ, பொதுநோக்கு என்பது உலிதுதுலிஜவிளஜவிள, தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கு நிலையில் இருந்து தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள நேர்மையற்றவர்கள் என்பது ம்ஷ்விஜூலிஜளவிமி ஸ்ரீளலிஸ்ரீயிள ஷ்ஜ மிஜூள வீழிதுஷ்யி ஜழிமிஷ்லிஜழியி ழிஷளஜழி கூஷ்ஷலிது மிஜூள ஸ்ரீளஷவிஸ்ரீளஉமிஷ்ஸள லிகூஷ் துலிணுஷ்யிஷ்குஷ்ஜஆ மிஜூள வீழிதுஷ்யி ஸ்ரீளலி-ஸ்ரீயிள ழிவி ழி ஜழிமிஷ்லிஜ.

நிலாந்தன் முன்னைய காலங்களில் நீதியரசர் விக்னேஸ்வரனை இந்திரன் சந்திரன் என்று போற்றிப் பாடியவர். இந்த உறவு இப்போதும் விட்டகுறை தொட்ட குறையாகத் தொடர்கிறது. தன்னை ஒரு ஆன்மீகவாதியாக சித்தரிக்கும் விக்னேஸ்வரன் சாராய விற்பனை உரிமம் பெற்றதைப் பற்றி நிலாந்தனிடம் இருந்து பேச்சு, மூச்சில்லையே? என்ன காரணம்?

உண்மையில் நிலாந்தனையும் அவரது பரிவாரங்களையும் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்து விட்டார்கள். அரியநேத்திரனுகுத் தலைப்பாக் கட்டி, பப்பா மரத்தில் ஏற்றி வழுக்கி விழ வைத்து அவருக்கு சங்கூதி விட்டார்கள். அவரை அம்மணமாக்கி விட்டார்கள். இருந்த ஒற்றுமையைக் குலைத்து தமிழ் இனத்துக்கு இரண்டகம் செய்து விட்டார்கள். தமிழ் மக்கள் முகத்தில் கரி பூசி விட்டார்கள். தங்கனது வீணாசைக்கு குறுந்தேசியத்துக்கு - அரியநேத்திரனைப் பலிக்கடா ஆக்கிவிட்டார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்தலில் போட்டியிட வைத்து, தமிழ் மக்களது ஒற்றுமையைக் கொட்டிக் குலைத்து, தமிழ்த் தேசியத்தைச் சிதறடித்து அரியநேத்திரனை அம்மணமாக்கிய நிலாந்தனும் அவரது பரிவாரங்களும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்! (நிலாந்தனும் அவரது பரிவாரங்களும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் முன்பாக மன்னிப்புக் கேட்டார்கள்.)

# களுத்துறையில் ரயில் மோதி மூவர் இறந்தது குறித்து பொலிஸ் விளக்கம்

களுத்துறை,கட்டுகுருந்த பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு ரயிலில் மோதி குழந்தை உட்பட மூவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளம் தந்தையும், 01 வயது குழந்தையும் 49 வயதுடைய அயல் வீட்டு நபருமே உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்த இளம் தந்தை தனது 01 வயது குழந்தையுடன் ரயிலில் பாய்ந்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த அயல் வீட்டு நபர், உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற இளம் தந்தையையும் குழந்தையையும் காப்பாற்ற முற்பட்ட போது மூவரும் ரயிலில் மோதியுள்ளனர்.

இந்நிலையில், இளம் தந்தையையும் அயல் வீட்டு நபரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் குழந்தை களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளம் தந்தை போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது உயிர் மாய்ப்பு சம்பவம் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(05)

# கம்பஹாவில் தொழிற்சாலையில் கொதிகலன் வெடித்து ஒருவர் சாவு



**19 பேர் காயம்**

பஹா,திவுலப்பிட்டிய , படல்கம பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் கொதிகலன் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர் என திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 50 வயதுடையவராவார்.

தொழிற்சாலையில் இருந்த கொதிகலன் வெடித்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# உஹனயில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் சாவு

உஹன, வெவேகம பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என உஹன பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வெவேகம பகுதியைச் சேர்ந்த 73 வயதுடையவர் ஆவார்.

உயிரிழந்த நபர் பாதுகாப்பற்ற முறையில் அனுமதியற்ற மின்சார கேபிளை தயார் செய்து கொண்டிருக்கும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உஹன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# அம்பாறையில் தமிழ் மக்கள் வாக்கை சிதைக்க மீண்டும் சூழ்ச்சி நடக்கிறது

## ஆயுதப் போராட்டத்தை சிதைத்தோர் மீது ஜெயசிறில் காட்டம்




போராட்டத்தை சிதைத்தவர்கள் இன்று வீட்டு சின்னத்தை சிதைக்க அரசியல் ரீதியாக பல செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளரரும் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமாகிய கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் குறிப்பிட்டார்.

காரைதீவில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீட்டு சின்னத்தை எந்த காலத்திலும் யாராலும் மறைக்க முடியாது . வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு தாய் கட்சி தமிழரசு கட்சிதான். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கப்பல் சின்னத்தில் ஒருவர் வந்து மக்களை மூளைச்சலவை செய்து முப்பதாயிரம் வாக்குகளை வீணடித்தார் இதனால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் இழந்து அரசியல் அநாதையாக்கப்பட்டனர்.

இதனை கருத்தில் கொண்டு தமிழரசுக் கட்சி தேசிய பட்டியலை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கியது. இம்முறை பொதுத்தேர்தலில் மாற்று கட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்த பல பிரயத்தனங்களை மேற்கொண்ட போது எம்முடன் இணைய பலர் விண்ணப்பித்தனர்.

இந் நிலையில் மக்கள் செல்வாக்குள்ள மக்களுக்கு பக்கச்சார்பின்றி சேவை வழங்க கூடிய இளைஞர்களுக்கு தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் இடம் வழங்கியுள்ளது.

அத்துடன் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பிரதிநிதி மாற்று இனத்தவருக்கு இனத்தவருக்கு கிடைத்த வரலாற்றை நாம் சிந்திக்க வேண்டும்.

இம் முறையும் தமிழ் மக்களின் வாக்குகளை சிதைத்து பிரயோசனம் இல்லாமல் செய்ய மீண்டும் ஒருவர் படகில் வருகின்றார்.

தேசியப் பட்டியலுக்காக தமிழ் மக்களது வாக்குகளை பிரித்து கட்சிகளுக்கு வழங்க அரசியல் ரீதியான நடவடிக்கை இடம் பெறுவதாகவும் மக்கள் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.
- என்றார். (05)

# முக்கியமான தீர்மானங்களின்போது தனிநபர் பற்றி அக்கறைப்படுவதில்லை

## தமிதா அபேரத்ன பிரச்சினைக்கு ஹேஷா பதில்

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஜனநாயகக் கட்சியாகும். அனைவரும் ஒருமித்து தான் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும். அந்த சந்தர்ப்பங்களில் நபர்கள் யார், அவர்களது பெயர்கள் என்ன என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் தமிதா அபேரத்ன விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கட்சியை வெற்றி பெறச் செய்வதே எமது பிரதான நோக்கமாகும். கடந்த தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு லட்சத்து 50 000இற்கும் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியை அண்மித்தோம். அந்த வகையில் இம்முறை அதனை விட அதிக வாக்குகளைப் பெற்று இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் 8 உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவே நாம் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். கட்சி என்ற ரீதியில் தீர்மானங்களை எடுக்கும் போது, அது கட்சியின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். அவ்வாறான தீர்மானங்களே இதுவரையில் எடுக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் போது நபர்கள், அவர்களது பெயர்கள் தொடர்பில் தேடிப் பார்ப்பதில்லை.

கட்சி சார்பில் தேசிய ரீதியில் யார் பொறுப்புக்களைஏற்றுக்கொண்டாலும்அதற்கு வாழ்த்து தெரிவிப்பது எமது கடமையாகும். அவ்வாறு வாழ்த்து தெரிவிப்பதும், இந்த மாவட்டத்தின் வெற்றிக்காக செயற்படுவதும் வேறுவேறாகும். மாவட்ட மக்களின் அபிலாஷைகளைநிறைவேற்றுவதற்காகவே நான் இதற்கு முன்னர் தீர்மானங்களை எடுத்திருக்கின்றேன். அவை மக்களின் விருப்பங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டவையாகும்.

எனவே இங்கு யாருடையதும் பெயர் முக்கியமானதல்ல. மக்களே முக்கியத்துவமுடையவர்கள். அந்தவகையில் மிகச் சிறந்த வேட்பாளர்களையே நாம் களமிறக்கியிருக்கின்றோம். எமது கட்சி ஜனநாயககட்சியாகும். எனவேஅனைவரும் ஒருமித்து தான் தீர்மானங்களையும் எடுத்திருக்கின்றோம். அந்ததீர்மானங்களின் அடிப்படையில் செயற்படும் போது சில சந்தர்ப்பங்களில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதில் நாம் பின்வாங்குவதில்லை.
- என்றார்.(05)




# அதானி குழுமத்தின் காற்றாலை மின் திட்டத்தை மீள்பரிசீலனை செய்யதயார்

## நீதிமன்றத்துக்கு ஆளும்தரப்பு அறிவிப்பு

மன்னார் விடத்தல்தீவில் இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின் திட்டம் குறித்து மீள்பரிசீலனை செய்யத் தயார் என அரசாங்கம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதிமன்றத்திற்கு இதனைத் தெரிவித்துள்ளது.

விடத்தல்தீவில்அதானிகுழுமம்காற்றாலைமின்திட்டத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டவேளை சட்டமா அதிபர் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.(05)

# ஆட்சியமைக்கின்ற அரசுடன் பேரம் பேசி செயற்படுவோம்

## மட்டு. ஈபிடிபி அமைப்பாளர் தெரிவிப்பு




வடக்கு, கிழக்கில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) கனிசமான ஆசனங்ளை பெற்றுக்கொண்டு ஆட்சியமைக்கின்ற அரசாங்கத்துடன் பேரம் பேசி செயற்படுவோம். எனவே, வீணைச் சின்னத்தில் போட்டியிடும் எங்களுக்கு வாக்களித்து எங்களை வெற்றிபெறச் செய்யவேண்டும் என மட்டக்களப்பு மக்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம் என ஈபிடிபி கட்சி மாவட்ட அமைப்பாளர் சிவானந்தராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்புஈபிடிபிகாரியாலயத்தில்ஞாயிற்றுக்கிழமை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்தலும் ஊடக மாநாடும் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) கட்சி வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் கொழும்பு மாவட்டம் உள்ளடங்கலாக தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

1994ஆம் ஆண்டில் இருந்து நாங்கள் இன்று வரை சகல மாவட்டங்களில் தேர்தல் களத்தில் இருந்தோம். அந்த வகையில் இந்த முறையும் தேர்தலில் தூய உள்ளம் கொண்ட வேட்பாளர்களை தெரிவு போட்டியிடுகின்றோம். நாங்கள் வட மாகாணத்தில் கிடைத்த ஆசனத்தை வைத்துக்கொண்டு பல செயற்றிட்டங்களை செய்தோம்.

அந்த வகையில் மீனவர்களுக்கான மானியங்கள் வழங்கிருந்தோம். இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று ஆட்சி மாற்றம் இடம்பெற்றுள்ளது.

ஆனால், நாங்கள் ஆரம்பித்த வேலைத்திட்டம் இடைநடுவில் விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது கட்சி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தொடங்கிய வேலையை முடிக்க வேண்டும் என தற்போதைய ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். அது கட்டாயமாக நடைபெறும்.

இருந்தபோதும் இவ்வளவு காலமும் தமிழ் தேசியம் என பேசிக்கொண்ட அரசியல்வாதிகளால் மக்களின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் எதுவும் நடந்ததில்லை. ஆனால், நாங்கள் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளை செய்து வந்திருக்கின்றோம்.

மாவட்ட மக்களுக்கு அன்பான வேண்டுகோள் ஈபிடிபி பரந்துபட்ட வேலைத்திட்டத்தை முன் உதாரணமாக கொண்டு இந்த தேர்தல் களத்தில் களமிறங்கியுள்ளோம்.

எனவே, இந்த முறை வீணை சின்னத்தில் போட்டியிடும் எங்களுக்கு வாக்களித்து எங்களை வெற்றிபெறச் செய்வதன் மூலம் மாவட்ட அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றை செய்யமுடியும்.
– என்றார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# பொலிஸார் மீது தாக்குதல் பாசிக்குடாவில் சம்பவம்

## மதுபோதையில் நீராடச் சென்றோர் அடாவடி

வாழைச்சேனைபாசிக்குடாகடற்கரையில் மதுபோதையில் கடலில் நீராடச் சென்ற குழுவினரை தடுத்து நிறுத்திய பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதில் இரு பொலிஸார் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை செவனபிட்டியவைச் சேர்ந்த குழுவினர் ஞாயிற்றுக்கிழமை பகல் உல்லாச பயணம் மேற்கொண்டு பாசிக்குடா கடற்கரையில் பொழுதை போக்கியதுடன், அங்கு மதுபானம் அருந்திய பின்னர் கடலில் நீராட முயற்சித்துள்ளனர்.

அப்போது அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மதுபோதையில் நீராடச் சென்றவர்களை தடுத்துள்ளனர்.

அப்போது அக்கூட்டத்தினருக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அவ்வேளை மதுபோதையில் இருந்தவர்கள் பொலிஸாரை தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்துவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டதையடுத்து, தாக்கிய நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், பொலிஸாரின் கடமைக்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி மாதம்பையில் ஒருவர் சாவு

மாதம்பை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுவெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ,ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என மாதம்பை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் , சுதுவெல்ல, மாதம்பை பகுதியைச்சேர்ந்த 35 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இறந்தவர் வீட்டின் அறையொன்றில் தரையில் உறங்கிக் கொண்டிருந்த போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார் என தற்போதைய விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மாதம்பை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சந்தேகநபரை கைதுசெய்ய பொதுமக்கள் உதவி தேவை

## பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவிப்பு




புறக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரெக்லமேசன் வீதியில், கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவரை கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இக்குற்றவாளி அப்பகுதியில் சுற்றித் திரிந்து குற்றச்செயல்களில் ஈடுபடுவது தொடர்பான சி. சி. டி. வீ காட்சிகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காணொளி , காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் , இவ்விடயம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொலைபேசி எண்

01. நிலைய அதிகாரி - புறக்கோட்டை 071 8591555.

02. குற்றப் புலனாய்வுப் பிரிவு - புறக்கோட்டை - 071 8594405.(05)

# உழவு இயந்திரம் கவிழ்ந்ததில் மெதிரிகிரியவில் சாரதி சாவு

*மெதிரிகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குசும் பொகுன பகுதியில்சிறியஉழவுஇயந்திரமொன்று வீதியில் கவிழ்ந்து அதன் சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர் குசும் பொகுன திவுலங்கடவல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார்.*

*இந்த உழவு இயந்திரம் பிங்பார பகுதியிலிருந்து குசும் பொகுன நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்துள்ளது.*

*இதன்போது சாரதி உழவு இயந்திரத்தின் அடியில் விழுந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான சாரதி மெதிரிகிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*இதனையடுத்து, சடலம் பொலன்னறுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (05)*

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



## வடக்கு....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவித பாதிப்பும் கிடையாது. அவர்களுக்குப் போட்டியாக இருக்கக்கூடிய மற்றத் தரப்புகள் அனைத்துக்குமே அது ஒரு பிரச்சினையாக இருக்கும். ஊழல் விடயத்தில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர மற்றைய அனைவரும் சிக்கிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது. இதனால் ஊழல் தொடர்பாக ஆட்சியாளர்கள் முன்னெடுக்கும் முயற்சிகளை நாங்கள் கேள்விக்குட்படுத்த விரும்பவில்லை. அதையாவது செய்யட்டும்.

வடக்கு, கிழக்கில் அவர்கள் இந்த விசாரணையைச் செய்வதின் ஊடாக நாங்கள் வெறுக்கத் தொடங்கி இருக்கின்ற தரப்புகளும் சிக்கிக்கொள்ளக்கூடும். இதனாலேயே இதனை நாங்கள் விரும்புகின்றோம்.

நாங்கள் சவால் விடுகின்றோம் வடக்கு, கிழக்கில் எங்களைத் தவிர மற்ற அனைவரும் அரசியல் ரீதியாக தேசிய மக்கள் சக்திக்கு ஒத்துழைப்பு வழங்க இப்போது தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, வடக்கு, கிழக்கில் ஊழல் சம்பந்தப்பட்ட விடயங்களை அவர்கள் விசாரிப்பீர்களாக இருந்தால் அனைவரையும் அம்பலப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

தெற்கில் அவர்களுக்கு வாக்குகள் வரலாம். வடக்கு, கிழக்கில் எங்களைத் தவிர மற்ற எடுபிடிகள் வென்றால் மாத்திரமே அவர்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கப் போகின்றது. ஆகவே, அவர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் வடக்கு, கிழக்கில் ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணையைத் தொடங்கட்டும்- -என்றார்.

## கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்போது கடன்பெறுவது மட்டுமே ஒரே வழி என்று அது தெரிவித்துள்ளது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி யின்ஆட்சிக்காலத்தில்உள்நாட்டுமற்றும்வெளி நாட்டு சந்தைகளில் இருந்து பெருமளவிலான கடன் பணம் பெறப்பட்டுள்ளதாக சிலர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பதிலளிக்கும் போதே நிதியமைச்சின் -மூத்த பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

பல்வேறு ஆட்சிகளின்போதும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை எதிர்கொண்ட வரலாற்றை நினைவுகூர்ந்த அவர், கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கு கடன் மறுசீரமைப்புவெற்றிகரமாகமேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஆட்சியாளர்களால்தாங்கிக்கொள்ளக்கூடிய நிதி நிலைமையை உருவாக்கி மக்களுக்கு முடிந்தளவு சுமையை ஏற்படுத்தாத வகையில் வரி வருவாயை பெறவேண்டும் என்றார் அவர்.ஆளும்தரப்பின் உள்நாட்டுக் கடன்கள் தொடர்பில் சிலருக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களும் இரக்கமற்ற விமர்சனங்களும் இருக்கின்றன. விமர்சகர்கள் என்ன சொன்னாலும், அதை எப்படி நிர்வகிப்பது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும், கடன் பெறுவதைத் தவிர இதில் வேறு வழிகள் இல்லை என்றார் அவர்.

## ஈபிடிபி கட்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீண்ட காலமாக ஐக்கியப்படவேண்டும். தமிழ் மக்களின் ஒற்றுமையை தென்னிலங்கைக்கு, இந்தியாவிற்கு, சர்வதேசத்திற்கு காட்டவேண்டும் அப்போதுதான் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கலாம் என கூறிகொண்டிருக்கிறார்கள். இது நேற்று இன்றில்லை 1974ஆம் ஆண்டு தொடக்கம் மக்களை உசுப்பேத்தி விடுவதற்கான கோசமாக இருந்திருக்கின்றது.

1974ஆம் ஆண்டில் இருந்து இக்கருத்து முன்வைக்கப்பட்டாலும் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகள் தீர்ந்ததாக இல்லை. பிரச்சினைகள் அதிகரித்துதான் இருக்கின்றன.

இடப்பெயர்வு, சொத்து மற்றும் உயிர் இழப்பு, அங்கவீனம் என்று துன்பங்களுக்கு மேல் துன்பங்களைத்தான் தமிழ் மக்கள் அனுபவித்திருக்கிறார்கள்.

தமிழ் அரசுக் கட்சி இன்று மூன்றாகப் பிளவுபட்டுள்ளது. தமிழ்அரசுக்கட்சி, ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பு (சுயேச்சை), ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி (டிரிஎன்ஏ) என பிரிந்திருக்கிறார்கள். தமிழ் அரசுக் கட்சி என இருப்பவர்களே இரண்டு அணியாக பிரிந்து செயல்படுகின்றார்கள்.

ஜனநாயகத்தில் கருத்து சுதந்திரம் இருக்க வேண்டும். அதுதான் அடிப்படை ஆனால் இங்கு நல்ல நோக்கத்திற்காக அந்த சுதந்திரத்தினைபயன்படுத்தாமல்அவர்கள்தம் சுயலாபத்திற்காகப் பயன்படுத்துகின்றார்கள்.

அதனைவிட தமிழ் அரசுக் கட்சியில் இருந்து பிரிந்தவர்கள்தான் இன்று சங்கை ஊதிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில், சங்கு சின்னத்தில் நிற்பவர்கள் கொலை, கொள்ளை, வன்முறைகளில் ஈடுபட்டவர்கள், அதனாலேதான் நாம் வெளியில் விட்டோம் எனக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அது உண்மை அல்ல, சுயலாபத்திற்காகவே இப்போது இப்படிச் சொல்கிறார்கள்.

ஈபிடிபி அவர்களைப் போன்றது அல்ல. மாறுபட்டது. ஈபிடிபி நீண்ட காலமாகவே கொள்கைகளையும்அதனைஅடைவதற்கான வேலைத் திட்டங்களையும் முன்வைத்து வருகின்றது. இன்றும் அதை நோக்கியே செயற்பட்டு வருகின்றது.

ஈபிடிபிக்கு போதிய ஆசனங்கள் இல்லை போதிய ஆசனங்கள் இருக்குமாக இருந்தால் மக்களுடைய அபிவிருத்திக்கான, அரசியல் உரிமைக்கான தீர்வு என மூன்று வகையான பிரச்சினைகளையும் தீர்க்க முடியும்.

தேசிய நல்லிணக்கத்தினூடாகவே இணக்க அரசியலின் ஊடாகவே தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நாம் நடவடிக்கை எடுப்போம். ஈபிடிபியின் கொழும் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் ஏன் புத்தபிக்குகளை சேர்த்திருக்கிறீர்கள் என ஒருவர் கேட்டிருந்தார். ஈபிடிபி 1987 கட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. இது கல், மண், சுண்ணாம்பு, , சீமெந்து சேர்த்துச் செய்த கொங்கிறீட் கலவை. இது இறுகினால் உருக்காகத்தான் இருக்கும். உதிர்ந்து போகாது என கூறியிருந்தேன்.

இலங்கை அரசியல் ஊடாக மங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்திருக்கின்றோம். இன்னும்பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்குத் தீர்வு காண வேண்டியிருக்கின்றது. எங்களுக்குப் போதிய ஆசனங்கள் இல்லை . ஆகவே இம் முறை நான் எதிர்பார்கின்றேன் 5 ஆசனங்கள் கிடைக்க வேண்டும். கிடைத்தால் இரண்டு வருடத்திற்குள்பிரச்சினைகளைதீர்க்கமுடியும்.

எமக்கு 5 ஆசனங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இன்று கூறுகின்றார்கள் டக்ளஸ் தேவானந்தாவின் வாக்கு அசையாது என, வேட்புமனுதாக்கல் செய்துவிட்டுஎல்லாகட்சிகளும்முடிவுகளுக்காக காத்திருந்தபோது சிலர் கதைத்தார்கள், யாழ். மாவட்டத்தில் உள்ள 6 ஆசனங்களில் டக்ளஸ் ஒன்றை வெல்வார், மற்றவைகள் யாருக்கெனச் சொல்ல முடியாது என்று. அதை நம்பவில்லை. எம் உழைப்பு, சேவையூடாக எங்கட கொள்கை ஊடாக மக்கள் அணிதிரண்டு எம்முடன் பயணிக்கவேண்டும் என கேட்டுகொள்கின்றேனே தவிர வாக்குகளை அபகரிக்க முனையவில்லை.

வேறு கட்சியில் இருபவர்களில் ஒரு உறுப்பினர்ஜனாதிபதியினைசந்தித்திருக்கிறார். அவர் சாராய பார் எடுத்ததாக கதை. அதே கட்சியில் இருக்கும் பிரதான உறுப்பினர் சாராயக் கடை எடுத்தவர்கள் பட்டியலை வெளியிடச் சொல்லி ஜனாதிபதியிடம் கேட்டிருக்கின்றார். ஆனால், சாராய பார் லைசன்ஸ் எடுத்தவர் ஜனாதிபதியிடம் சொல்லியிருக்கின்றார் பட்டியலை வெளியிட வேண்டாம் என்று.

ஆனால் ஈபிடிபி கடந்த காலத்தில் ஆளும்தரப்புடன் கொண்டிருந்த உறவு இப்படியிருக்கவில்லை. அது மக்கள் நலன் சார்ந்து கொள்கை நிலப்பாட்டிலையே இருந்தது - என்றார்.

## லஞ்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சேவையில் வினைத்திறன், சட்டத்தின் ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மை ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு ஜனாதிபதி அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார்.

பொருளாதார வெற்றியுடன் இந்த முக்கியமான தூண்கள் இணைந்திருக்கவேண்டும் என நாங்கள் கருதுகின்றோம், நாங்கள் மக்களுக்கு வழங்கியுள்ள உறுதிமொழிகளிற்கு ஏற்ப இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள மாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






# தூய மாற்றத்துக்கான தமிழ் தேசிய சக்தி பசு சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை

## தமிழர் சம உரிமை இயக்கம் அறிக்கை

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் வழிப்படுத்தலில் மாற்றத்துக்கான தமிழ் தேசிய சக்தியாகதமிழ்தேசியதளத்தில்மக்கள் வாழ்வியலை மேம்படுத்தவே நாம் களம் கண்டுள்ளோம். தூய மாற்றத்துக்கான தமிழ் தேசிய களத்தில் தமிழர்சமஉரிமைஇயக்கத்தினர் யாழில் பசு சின்னத்திலும் வன்னியில் பூட்டு சின்னத்திலும் சுயாதீனமாகபோட்டியிடுகின்றனர் என்றுஎதிர்வரும்நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் பசு சின்னத்திலும் வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டியிடும் தமிழர் சம உரிமை இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயேஇவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளரும்வலி.வடக்குபிரதேச சபைமுன்னாள்உறுப்பினருமான த.நிகேதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் வழிப்படுத்தலில் மாற்றத்துக்கான தமிழ் தேசிய சக்தியாக தமிழ் தேசிய தளத்தில் மக்கள் வாழ்வியலை மேம்படுத்தவே நாம் களம் கண்டுள்ளோம். தூய மாற்றத்துக்கான தமிழ் தேசிய களத்தில் தமிழர் சம உரிமை இயக்கத்தினர் யாழில் பசு சின்னத்திலும் வன்னியில் பூட்டுசின்னத்திலும்சுயாதீனமாக போட்டியிடுகின்றனர்.

தமிழ் மக்கள் யுத்தத்துக்குப் பின்னரான 15 ஆண்டுகளில் தற்போது களத்திலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளையும் நம்பிக் களைத்துவிட்டனர். நாம் இதுவரை வாக்களித்து தெரிவுசெய்தவர்கள்தங்களுக்குள் அடிபடுவதிலும் சுகபோகங்களை அனுபவிப்பதிலும் அதனை விட பார் பெர்மிட் பெற்று மக்களை போதைக்கு அடிமையாக்கி இளையோரை அழிக்கவும் துணை போகின்றனரே அன்றி மக்களுக்கான எந்த நல்ல விடயங்களையும்செய்யவில்லை.

தமிழர் தரப்பின் இந்த கையறு நிலையில் தெற்கில் மாற்றத்தை ஏற்படுத்தியோர் வடக்கிலும் காலூன்ற முனைகின்றனர். தமிழர்களுடைய அடிப்படை அபிலாசைகளை சமஷ்டி முறை இணைந்த வடக்கு கிழக்கு மாநிலமோ சம உரிமைகளோ இன்னும் கிடைக்காத நிலையில், தெற்கின் அலையில் அள்ளுண்டு போக தமிழ் மக்கள் விரும்பவில்லை.

காலத்தின் தேவை கருதி குறுகிய அவகாசம் இருப்பினும் மாற்றத்துக்கான தூய பொது முகங்களாக சமூகத்தின் சகல தளங்களிலிருந்து தமிழ் தேசிய மனிதநேயச் செயற்பாட்டாளர்களான நிபுணர்களும்பெண்களும்இளையவர்களும்தியாக வேள்வியில் இளமைக்காலத்தை அர்ப்பணித்த தமிழ்தேசியபோராளிகள்மாற்றுத்திறனாளிகள்என அனைவருக்கும்நாம்சந்தர்ப்பம்வழங்கியுள்ளோம்.

தொகுதிவாரியாகபொறுப்புக்கூறும்கடப்பாட்டுடன் நிறுத்தப்பட்டுள்ள எமது பொதுமுகங்களான முதன்மை வேட்பாளர் கல்வியியலாளர் கலாநிதி தே.தேவானந்த், ஊடகவியலாளர் ந. பொன்ராசா, சட்டத்தரணி ஜெ. நீலலோஜினி, கிளிநொச்சி இந்து கல்லூரி முன்னாள் உப அதிபர் அ.சிவஞானம் உள்ளிட்ட வேட்பாளர் குழாம் யாழில் பசு சின்னத்திலும், தமிழ் தேசிய போராளி முல்லை ஆனந்தன், முல்லையின் பட்டதாரி இளைஞர் கோகுலன், வன்னி மாற்றுத்திறனாளிகள் சங்க வவுனியா உபதலைவர் சாந்தகுமார், தேசியமீனவர் ஒத்துழைப்பு சங்க மன்னார் செயலாளர் திருமதி பாமினி உள்ளிட்ட குழாமினர் வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டியிடுகின்றனர். இவர்களை ஆதரித்துதமிழ்த்தேசியமறுமலர்ச்சிக்குவழிவகுக்க வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# ஓட்டோ சாரதியை கொன்றுவிட்டு மலையிலிருந்து வீசிய கொடூரம்

## சந்தேகநபர் கைது

பதுளை, மடுல்சீமை லோகந்தய மலை பகுதிக்கு ஓட்டோ சாரதி ஒருவரை அழைத்துச் சென்று தாக்கி கொலை செய்துவிட்டு சடலத்தை மலை உச்சியிலிருந்து கீழே வீசிய சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, ஹாலிஎல பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையஓட்டோசாரதியேகொலைசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மடுல்சீமை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

கொலை செய்யப்பட்ட ஓட்டோ சாரதி குத்தகை அடிப்படையில் சந்தேக நபரிடமிருந்து ஓட்டோ ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவத்தன்று சந்தேக நபர் தனது நண்பருடன் இணைந்து, கொலை செய்யப்பட்ட ஓட்டோ சாரதியை மடுல்சீமை லோகந்தய மலைப்பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர், சந்தேக நபர் தனது நண்பருடன் இணைந்து, ஓட்டோ சாரதியை தாக்கி கொலை செய்துவிட்டு சடலத்தை மலை உச்சியிலிருந்து கீழே வீசியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



### இடதுசாரிகள் சமத்துவம் பேசுவது புதிதல்ல

# ஜேவிபி தமிழரை 2ஆம் தரப்பாக பார்ப்பது கவலைக்குரிய விடயம்

### தந்தை செல்வாவின் பேரன் அறிமுக உரை

இடதுசாரிகள் சமத்துவம் பேசுவது புதிதல்ல. ஆனால், ஜேவிபி தமிழர்களை இரண்டாம் தரப்பாகவே பார்ப்பது கவலைக்குரியது. அத்தோடு தமிழர்களுக்கு என்ன தீர்வு என்பதைத் தெளிவாகக் கூறாத தேசிய மக்கள் சக்தியிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சந்திரஹாசன் இளங்கோவன் தெரிவித்தார். இவர் தமிழ் அரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வாவின் பேரனும் ஆவார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:


தென்பகுதியில் ஒரு மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது. ஊழலுக்கு எதிரான அரசு வேண்டும், எல்லோரும் காணப்படுகின்றது. அதேநேரம் தமிழர்கள் மத்தியில் பல குழப்பங்கள் காணப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பம், கட்சிக்குள் குழப்பம் என நாம் பிரிந்து நிற்கின்றோம்.

இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தியானது சமத்துவமான ஓர் அரசியலைப் பேசுகின்றது, புதிய ஓர் அரசியல் கலாசாரத்தை முன்னெடுக்கின்றது என்று இளைஞர்கள் கூறத் தலைப்படுகிறார்கள். இடதுசாரி கட்சிகள் சமத்துவம் கவலையான விடயம் அது தமிழ் மக்களை இரண்டாம் தரப்பாகப் பார்ப்பதுதான். அதிலிருந்தே தமிழர்கள் விடயத்தில் அவர்களிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் தமிழருடைய தீர்வு தொடர்பில் தெளிவாக எந்தவொரு விடயத்தையும் முன்வைக்கவில்லை. தெளிவான விடயத்தை இதுவரையிலும் முன்வைக்கவில்லை. அவர்கள் அதை வெளிப்படையாகப் கூறுவதற்குப் பயப்படுகின்றார்கள். மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் – என்றார்.

### சத்தியலிங்கம் மீதான

# சிவமோகனின் குற்றச்சாட்டு காழ்ப்புணர்வால் வந்த பொய்

### அவைத் தலைவர் சிவஞானம் தெளிவுபடுத்தல்



வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம் மீது கட்சியின் மற்றொரு உறுப்பினரான சிவமோகன் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் முழுப் பொய், காழ்ப்புணர்வில் சொல்கிறார். எந்தவொரு ஊழல் குற்றத்தின் பெயரிலும் சத்தியலிங்கம் பதவி நீக்கம் செய்யப்படவில்லை என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு யாழ் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் அண்மையில் வவுனியாவில் வைத்து வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தொடர்பில் ஒரு பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஊழல் குற்றத்தின் பெயரில் பதவி நீக்கம் செய்யப்படவில்லை. மாகாண அமைச்சர்களுக்கு எதிரான ஓய்வுபெற்ற நீதிபதிகள் குழு சத்தியலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமற்றவை எனவும், அவரைச் சகல குற்றச்சாட்டுக்களில் இருந்தும் முழுமையாக விடுவிப்பதாகவும் எழுத்தில் பரிந்துரைத்துள்ளது. இதனை அந்த விசாரணை அறிக்கையில் எவரும் எப்போதும் பார்வையிட முடியும்.

அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக தேர்தலில் போட்டியிடச் சந்தர்ப்பம் கிடைக்காமைக்காகப் பொய்யான குற்றச்சாட்டை மருத்துவர் சிவமோகன் முன்வைக்கின்றார் – என்றார்.

# மத தலைவர்களின் ஆசியுடன் பரப்புரை ஆரம்பித்த டினேசன்

### சந்தேகநபர் கைது

சர்வமத தலைவர்களின் ஆசியுடன் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணியும் சமூகசேவையாளருமான செல்வராஜ் டினேசன் சனிக்கிழமை தனது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் இளம் சட்டத்தரணியான செல்வரஜா டினேசன் 2024 நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பாக வன்னி மாவட்டத்தில் மன்னாரில் இருந்து போட்டியிடுகின்றார்.

இம்முறை மாற்றம் ஒன்றையும், இளம் வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற பலரது கோரிக்கைகளுக்கு அமைவாகவும் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இந்த நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளடங்களாக சர்வமத தலைவர்களின் ஆசியுடன் தனது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்துள்ளார்.

இவருக்கு மன்னார் மாவட்டத்தில் இளைஞர் குழுக்கள் அமோக ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊழலற்ற ஆட்சியை முன்னெடுக்க புதியவர்களுக்கு சந்தர்ப்பம் தேவை

### எமில்காந்தன் கோரிக்கை



தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றத்தைப் போன்று வன்னியிலும் ஊழலற்ற மக்களுக்கான ஆட்சியை முன்னெடுக்க புதியவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என வன்னி மாவட்ட சுயேட்சை குழு 7 இன் முதன்மை வேட்பாளர் எமில்காந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஊழலற்றவர்கள், புதியவர்கள், இளைஞர்கள், மண்ணைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்ற எண்ணம் வன்னி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அத்தகைய மாற்றத்திற்கு ஒரு குழுவாக உங்களில் ஒருவராக நாம் போட்டியிடுகின்றோம். அதற்கான ஆணையை மக்கள் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவதன் மூலம் மக்களின் மனங்களைளும், வீடுகளிலும், கிராமங்களிலும் மாற்றந்தை காணமுடியும்.

வன்னி மக்களின் அரசியல், அபிலாசைகளுடன் இணைந்த அபிவிருத்தியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எம்முடன் மக்கள கைகோர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.(100)

# நாவலப்பிட்டி வீதியில் விபத்து: சிறுவன் இறப்பு: இருவர் காயம்

கம்பளை - நாவலப்பிட்டி வீதியில் கம்பளை நகரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர் என கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளையிலிருந்து நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்த ஜீப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த ஓட்டோவுடன் மோதி பின்னர் அருகிலிருந்த கடை மற்றும் மற்றுமொரு ஓட்டோ மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, ஒரு ஓட்டோ சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த சிறுவனும் கடையில் இருந்த நபரும் காயமடைந்துள்ள நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 03 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, ஜீப் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெளிநாட்டுச் சிகரட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுக்களுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சிலாபம், பிங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஒருவர் ஆவார்.

சந்தேக நபரான பெண் டுபாயிலிருந்து ஞாயிறு பிற்பகல் 5.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 25,000 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 125 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.(05)

# வரி செலுத்தாத குற்றத்திற்காக அர்ஜுன் அலோசியஸுக்கு சிறை

வட் வரி செலுத்த தவறியமைக்காக டபிள்யூ.எம்.மெண்டிஸ் நிறுவனத்தின் இயக்குநர் அர்ஜுன் அலோசியஸுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் ஆறு மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

3.5 பில்லியன் வரியை செலுத்த தவறியமைக்காவே நீதிமன்றம் இந்த தண்டனையை விதித்துள்ளது.

இந்த குற்றத்துக்காக மேலும் இருவருக்கும் நீதிமன்றம் ஆறு மாதகால சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.(05)

# அம்பாறையில் கனமழை பொதுமக்கள் சிரமம்

(சிஹான் பாரூக்)

அம்பாறையில் பலத்த மழையால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதோடு, சில இடங்களில் மழை குறைந்து காற்றுடன் கூடிய வானிலையால் மக்களது அன்றாட இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாவிதன்வெளி, கல்முனை முஸ்லீம் பிரிவு, தமிழ் உப பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதான போக்குவரத்து பாதைகள் சில வெள்ளக்காடாகக் காட்சிதருவதால் தூர இடங்களுக்கு செல்லும் அனைத்து போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளதோடு உள்ளூர் வீதிகள் அனைத்திலும் நீர் நிரம்பி வழிகின்றது.

ஞாயிற்றுக்கிழமை முதல் நேற்று (திங்கட்கிழமை) திடீரென ஏற்பட்ட அடைமழை காரணமாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேச பிரதான வீதிகளில் நீர் நிரம்பி ஓடுவதுடன் வாகன சாரதிகள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

மேலும், மழையால் வீடுகள், வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதுடன் அவற்றை வெளியேற்றும் முயற்சியில் பாதிக்கப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் திடீரென மழை பெய்து வருவதுடன் வீதிகள் குடியிருப்புக்கள் என பல இடங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

சில வீதிகளில் வடிகான்களுக்கு மேலாக மழை நீர் பரவுவதால் வீடுகளுக்குள் வெள்ள நீர் உட் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் அதனை தடுப்பதற்கான நடவடிக்கையினை பொது மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடிகான்களை விரைந்து சீர்செய்யுமாறு கல்முனை மாநகர சபையிடம் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(05)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

*மகுலுகஸ்வெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவஹூவ பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை சட்டவிரோதமாக வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மகுலுகஸ்வெள பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த சந்தேகநபர் 33 வயதான தேவஹூவ பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மகுலுகஸ்வெள பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2024இல் வெளியிடப்பெற்றது